ஹெலன் கெல்லர்

எழுத்து: டேவிட் ஏ. அட்லர்
புகைப்படம்: ஜான் வால்னர்
மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா



ஹெலன் கெல்லர் காது கேளாதவராகவும் பார்வையற்றவராகவும் இருந்தார்.

இதையெல்லாம் மீறி, குழந்தை பருவத்திலிருந்தே அவர் தன் கைகளால் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார்.

பின்னர் அவர் பல புத்தகங்களை எழுதினார் ,

பல்வேறு இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றினார்.

அவர் அமைதி மற்றும் சம உரிமைகளுக்காக போராடினார். அவர் பலருக்கும், தங்களின் கனவுகளை நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கையை அளித்தார்.

ஹெலன் கெல்லர் தனது காலத்தின் மிகச் சிறந்த பெண்களில் ஒருவராக இருந்தார்.

ஹெலன் கெல்லர்

எழுத்து: டேவிட் ஏ. அட்லர்
புகைப்படம்: ஜான் வால்னர்
மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா



ஜோனாதனும் லேயாவும் ,
ஷானா , டேவிட் மற்றும்
ஷிராவுக்கு

டி.ஏ.ஏ.

துடிக்கும் இதயத்துடன்
ஏதாவது நடக்கக் காத்திருக்கும்
புரட்சிகர ஆன்மாக்களுக்கு

.

ஜே.சி.டபிள்யூ.

உள்ளடக்கம்



1. நோய்

ஹெலன் கெல்லர் ஒரு எழுத்தாளர் மற்றும் பேச்சாளர்.

அவர் அதிபர்களின் தோழி.

ஹெலன் காது கேளாதவராகவும் பார்வையற்றவராகவும் இருந்தார்.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், ஹெலன் கெல்லர் தனது காலத்தின் மிகச் சிறந்த பெண்களில் ஒருவராக இருந்தார்.



ஹெலன் கெல்லர் ஜூன் 27, 1880 அன்று பிறந்தார்.

அவர் அலபாமாவில் உள்ள ஒரு சிறிய நகரில் பிறந்தார்.

அவர் ஒரு அழகான குழந்தையாகவும் புத்திசாலியாகவும் இருந்தார். பிறந்து ஆறு மாத காலத்தில் அவர் பேசத் தொடங்கினார்.

தனது முதல் பிறந்த நாளில் அவர் நடக்கத் தொடங்கினார்.





ஆனால் இரண்டாவது பிறந்த நாளுக்குச் சில மாதங்களுக்கு முன்பு ஹெலன் நோயுற்றார். மருத்துவர் அவர் இறந்து விடுவார் என்றே நினைத்தார்.

ஹெலன் உயிர் பிழைத்தார் ,

ஆனால் அவர் தனது பார்வையையும் கேட்கும் திறனையும் இழந்தார்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு, ஹெலனின் உலகம் திடீரென்று இருண்டதாகவும் அமைதியாகவும் மாறியது.



2. இருளிலிருந்து வெளிச்சத்தை நோக்கிய பயணம்



மக்கள் பேசுவதை ஹெலன் கேட்கவில்லை, அதனால் அவருக்கு புதிய சொற்களை கற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. விரைவில் அவர் அறிந்திருந்த சில சொற்களையும் மறந்து விட்டார். இதனால் ஹெலனுக்கென்று பேசும் தனிப்பட்ட விதம் தோன்றியது. அவர் ஒருவரை தள்ளியபோது அதற்கு 'போ' என்று பொருள். ஒருவரை இழுத்தபோது அதற்கு 'வா' என்று பொருள். ஹெலன் கண் கண்ணாடியை அணிவது போல நடிக்கும்போது அதற்கு 'தந்தை' என்று பொருள்.











ஹெலனுக்கென்று சுமார் அறுபது சைகைகள் இருந்தன. எனினும், அவர் சொல்ல விரும்பிய பல விஷயங்களை அவரால் சொல்ல முடியவில்லை. சில நேரங்களில் ஹெலன் மக்களின் உதடுகளைத் தொட்டார்.

அவர்களின் உதடுகள் அசையும்போது அவர்கள் பேசுகிறார்கள் என்பதை ஹெலன் உணர்ந்தார், ஆனால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை அவரால் அறிய முடியவில்லை . ஹெலன் தன் உதடுகளை அசைத்தார் , கைகளை ஆட்டினார் ஆனால் அவர் பேசவில்லை என்பதை அவள் அறிந்தார்.



“இதனால் எனக்கு மிகவும் கோபம் வந்தது,” என்று ஹெலன் பின்னர் எழுதினார், “நான் கால்களை உதைத்தும் கத்தியும் அழுதேன்”.
அவரின் பெற்றோர் அவரை மருத்துவர்களிடம் கொண்டு சென்றார்கள். ஆனால் ஹெலன் பார்க்கவும் கேட்கவும் அவர்களால் எந்த உதவியும் செய்ய முடியவில்லை.
இதனால் கெல்லர் குடும்பம் ஹெலனுக்கான ஒரு ஆசிரியரைத் தேடத் தொடங்கினர்.



அவர்கள் வாஷிங்டன் டி.சி.க்கு அலெக்சாண்டர் கிரஹாம் பெல்லைச் சந்திக்கச் சென்றார்கள். அவரே தொலைபேசியை கண்டுபிடித்தவர். டாக்டர் பெல் முன்பு செவித்திறன் குறைந்தவர்களுக்கான பள்ளியில் ஆசிரியராக இருந்தார்.
“அவர் என் சைகைகளைப் புரிந்து கொண்டார்”,என்று ஹெலன் பின்னர் எழுதினார். “நான் அதை உணர்ந்தேன், உடனே அவரை நேசித்தேன்.”
ஹெலனுக்கான ஒரு ஆசிரியரைக் கண்டுபிடிப்பதில் டாக்டர் பெல் உதவினார்.

3. அந்த உயிரோட்டம் கொண்ட வார்த்தை





“என் வாழ்நாளில் மிக முக்கியமான நாள்,” என்று ஹெலன் பின்னர் எழுதினார், “என் ஆசிரியர் ஆனி மான்ஸ்ஃபீல்ட் சல்லிவன் என்னைச் சந்தித்த நாள்.”அந்த நாள் மார்ச் 3, 1887. அப்போது ஹெலனுக்கு ஆறு வயது.



ஹெலனின் முதல் பாடத்திற்காக, ஆனி விரல் எழுத்துமுறையை பயன்படுத்தினார்.
அவர் ஹெலனின் கையில் பொ...ம்...மை... என்ற எழுத்துக்களைச் தொட்டு எழுதினார்.

பின்னர் ஹெலனுக்கு ஒரு பொம்மையைத் தந்தார். ஹெலனுக்கு இது ஒரு விளையாட்டு போலவே இருந்தது.



தன் கையில் எழுதப்பட்டிருந்தது ஒரு பொம்மை என்பதை அவர் அறியவில்லை. உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் இருப்பதைப் பற்றியும் அவருக்குத் தெரியவில்லை.

ஒரு நாள் நடக்கச் செல்லும்போது, ஆனியும் ஹெலனும் ஒரு நீர்குழாய் அருகே வந்தார்கள். ஆனி ஹெலனின் ஒரு கையை தண்ணீரில் வைத்தார். ஹெலனின் மற்றொரு கையில் ஆனி “நீ...ர்...” என்று எழுதினார். திடீரென, ஆனி தனக்கு என்ன கற்பிக்க முயல்கிறார் என்பதைக் ஹெலன் புரிந்துகொண்டார்.







ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் உள்ளது. அன்று ஹெலன் பல புதிய சொற்களை கற்றுக்கொண்டார். அன்றிரவு, முதல் முறையாக, ஹெலன் கெல்லர் “ஒரு புதிய நாளின் வருகைக்காக எங்கி’ காத்திருந்தார்.

4. அன்பும் நம்பிக்கையும்



ஹெலன் நூற்றுக்கணக்கான, பின்னர் ஆயிரக்கணக்கான சொற்களை கற்றுக்கொண்டார். அவர் தனது கைகளால் பேசவும் கேட்கவும் கற்றுக்கொண்டார்.



1900ஆம் ஆண்டு, ஹெலன் ராட்க்ளிஃப் கல்லூரிக்கு சென்றாள். ஆனி சல்லிவன் அவரின் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, வகுப்பில் சொல்லப்பட்டதை, ஹெலனின் கையில் எழுத்துக்களாக எழுதிக் காட்டினார். ஹெலன் கல்லூரியில் இருந்தபோது, அவர் தி ஸ்டோரி ஆஃப் மை லைஃப் என்ற புத்தகத்தை எழுதினார். உலகம் முழுவதும் உள்ள மக்கள் அதை வாசித்தனர்.

காகிதத்தின் மீது உள்ள சிறிய புடைப்புகளைத் தொடுவதன் மூலம் ஹெலன் படிக்க கற்றுக்கொண்டார். பார்வையற்றோருக்கான அந்த வகை எழுத்து ப்ரெயில் எனப்படுகிறது. ஹெலன் பத்து வயதாக இருக்கும்போது, அவர் பேச கற்றுக்கொண்டார். தானோ, மற்றவர்களோ உருவாக்கிய ஒலிகளை அவரால் கேட்க முடியவில்லை . அவர் ஒருபோதும் தெளிவாக பேச கற்றுக்கொள்ளவில்லை.







பின்னர் ஹெலன் மேலும் பல புத்தகங்களை எழுதினார். அவர் அமெரிக்கா முழுவதும் பயணம் செய்தார். ஆயிரக்கணக்கான மக்கள் அவர் பேசுவதைக் கேட்க வந்தார்கள்.

அவள் ஐரோப்பாவுக்கும் ஜப்பானுக்கும் சென்றார். பெண்களின் உரிமைகளுக்காக ஹெலன் பேரணி நடத்தினார். உழைக்கும் மக்கள் மற்றும் ஏழைகளுக்கு உள்ள பல தேவைகள் பற்றி அவர் எழுதினார் .





இரண்டாம் உலகப்போரின் போதும் அதற்கு பின்னரும், போரில் கண் பார்வையும் செவித்திறனையும் இழந்த வீரர்களை ஹெலன் சந்தித்தாள். அவர்களும் முழுமையான, மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடியும் என்ற நம்பிக்கையை ஹெலன் அவர்களுக்கு அளித்தார்.





ஹெலன் கெல்லர், தன்னிடம் நல்ல நண்பர்களும், செய்ய சுவாரஸ்யமான பணியும் இருந்ததால் மகிழ்ச்சியாக இருந்தேன் என்று கூறினாள்.

1964ஆம் ஆண்டு, சிறந்த பணிக்காக ஜனாதிபதி லிண்டன் ஜான்சன் ஹெலனுக்கு “அதிபரின் சுதந்திரப் பதக்கம்” வழங்கினார்.



ஹெலன் கெல்லர், ஜூன் 1, 1968 அன்று இறந்தார். உலகம் முழுவதும் உள்ள மக்கள் அவருக்காகக் கண்ணீர் வடித்தனர். அவர் பார்க்கவும் கேட்கவும் முடியாத உலகெங்கும் உள்ள மக்கள் அவறை நேசித்திருந்தனர். ஹெலன் கெல்லரும், அவர்களை நேசித்திருந்தார்.

முக்கிய தேதிகள்

ஜூன் 27, 1880 - ஹெலன் கெல்லர் அலபாமாவில் உள்ள டஸ்கம்பியாவில் பிறக்கிறார் .

பிப்ரவரி 1882 -ஒரு நோயின் விளைவாக, அவர் பார்வையற்றும் காதுகேளாதவராகவும் ஆகிறார்.

மார்ச் 1887 - ஹெலன் ஆனி சல்லிவனை சந்திக்கிறார்.

1900 - ஹெலன் ராட்க்ளிஃப் கல்லூரியில் மாணவராகிறார்.

அவர் பார்வையற்றோருக்கான அமெரிக்க அறக்கட்டளையில் பணியாற்றத் தொடங்குறார்.

அக்டோபர் 20, 1936 – ஆனி சல்லிவன் இறக்கிறார்.

1964 - ஹெலன் கெல்லருக்கு ஜனாதிபதியின் சுதந்திர பதக்கம் வழங்கப்படுகிறது.

ஜூன் 1, 1968 - ஹெலன் கெல்லர் இறகிறார்.

மூலங்கள்

கெல்லர், ஹெலன். *த ஸ்டோரி ஆ்ஃப் மை லைஃப்* , நியூ .யார்க், டபுள்டே, 1954

கெல்லர், ஹெலன், *மிட்ஸ்ட்ரீம் : மை லேட்டர் லைஃப்* , நியூ .யார்க், க்ரீன்வுட் பிரஸ், 1968

லாஷ், ஜோசப் பி. ஹெலன் மற்றும் டீச்சர், *த ஸ்டோரி ஆஃப் ஹெலன் கெல்லர் அன்ட் ஆனி சல்லிவன் மேசி, நியூ யார்க், டெலாகோர்ட்டே,, 1980*

டேவிட் ஏ. அட்லர் புகழ்பெற்ற படத்துடன் கூடிய வாழ்க்கை வரலாறு தொடர்களின் எழுத்தாளர். இது, மிகவும் பிரபலமான *டாக்டர் மார்டின் லூதர் கிங், ஜூனியர்* புத்தகத்திற்குப் பின்னர், அவரது இரண்டாவது ஹாலிடே ஹவுஸ் ரீடர் ஆகும். அவர் தனது குடும்பத்துடன் நியூயார்க் மாநிலத்தில் வசிக்கிறார்.

ஜான் வால்னர் மேனில் வசிக்கிறார். அவர் குழந்தைகளுக்கான பல புத்தகங்களுக்கு படம் வரைந்திருக்கிறார் , அதில் டேவிட் ஏ. அட்லரின் படத்துடன் கூடிய வாழ்க்கை வரலாறு புத்தகங்களும் அடங்கும், *தி ஹார்ன் புக்,* அட்லர் மற்றும் வால்னரின் எ பிக்சர் புக் ஆஃப் ஹெலன் கெல்லர் புத்தகத்தின் எளிய மொழி மற்றும் உயிரோட்டமான படங்கள்”, ஹெலன் கெல்லரின் வாழ்க்கை மற்றும் சாதனைகளைப் பற்றிய அடிப்படை தகவல்களை வெளிப்படுத்துகின்றன எனப் புகழ்ந்தது.